PDF Eraser Free

# பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே!

*லில்லியன் ஸ்டான்லி*

*“கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும். எப்படியெனில் மனிதர் பணப்பிரியராய் இருப்பார்கள்” (2 தீமோ 3:1,2).*

ஆபிரகாமின் நாட்களிலேயே வெள்ளி வடிவில் பணம் புழக்கத்தில் இருந்தது (ஆதி 23:13.15). அப்பொழுதே அவர் பண ஆசைக்குப் பலியாகி விடாதபடி எச்சரிக்கையாயிருந்தார். சோதோமின் அரசர் அவருக்குக் கொள்ளை அனைத்தையும் கொடுத்தபோது அவர், “ஆபிரகாமை செல்வந்தனாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும், செருப்பின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமி யையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்” என்றார். இதை எதிர்பார்த்து, சோதோமின் அரசனிடமிருந்து ஒன்றும் வாங்குவதில்லை என்று ஆண்டவருக்கு வாக்களித்து பேராசையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொண்டார் (ஆதி 14:1-23).

ஆபிரகாமின் தரமெங்கே, நாமெங்கே! நான் ஒருவேளை “ஆண்டவரே, கொள்ளையில் எனக்கு நல்ல பங்கு கிடைக்கட்டுமே” என்று ஜெபித்திருப்பேன். “சோதோமின் அரசன் என்னைப் பணக்காரியாக்கினேன் என்று தம்பட்டமடித்துக் கொண்டால் எனக்கென்ன?” என்றிருப்பேன். ஆண்டவர் எனக்குக் கொடுத்ததை சாட்சியாகக் கூறி ஏழைகளுக்கு உதவத் திட்டமிட்டிருப்பேன். ஆபிரகாமின் தரத்திற்கு வருவோம். இறைவனின் நம்பத்தகுத் தோழனாக ஆபிரகாம் இருந்ததில் ஆச்சரியமென்ன! (ஆதி 18:18). கர்த்தர் வானத்தையும் பூமியையும் உடையவர் என்ற தைரியத்தில்தானே அதைச் சொன்னார் (14:23). பண ஆசை குறித்து ஆபிரகாமுக்கு என்ன போதனை இருந்தது? மனச்சான்றே அவரது ஆசான். உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள், நீங்கள் பணப் பயித்தியமா இல்லையா என்று அது சொல்லும். பணமல்ல யோபுவின் நம்பிக்கை. தனது சொத்தில் அவர் மகிழக்கூட இல்லை (யோபு 31:24.25). அவருக்கும் திருமறையோ வேறு போதனையோ கிடையாது. தானியேலுக்கு இரத்தாம்பரமும் தங்க நெக்லசும் அரசில் மூன்றாம் அதிபதி பதவியும் அரசர் பெல்ஷாத்சார் வாக்களித்தபோது தானியேலின் பதில், “உம்முடைய வெகுமானங்களை நீரே வைத்துக் கொள்ளும்; உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்” என்பதே (தானி 5:16,17). நாமாக இருந்தால் பரிசளிப்பு விழாவைப் படமெடுத்துப் பத்திரிகையில் பிரசுரிப்போம். எலிசா, பவுல் போன்ற முன்மாதிரிகள் நமக்குப் பல உண்டு.

பண ஆசையை இயேசு ஓங்கி அடித்தார். “ஏழைகளாகிய நீங்கள் பாக்கியவான்கள்” என்றார் (லூக் 6:20). ஏன்? ஏனெனில் இறையரசு அவர்களுடையது. ஏன்? ஏனெனில் செல்வந்தர் இறையரசில் நுழைவது மகா கடினம் (18:24). ஆதித் திருச்சபையில் பலர் தங்கள் சொத்தை விற்றுக் கொடுத்தபோது, பர்னபா மட்டும் குறிப்பிடப்படுவது ஏன்? அவர் ஒரு லேவியன். மற்ற கோத்திரங்களுக்கு இடமளிக்கப்பட்டதுபோல் லேவியருக்குக் கொடுக்கப் படவில்லை. பர்னபாவிற்கு நிலமிருந்ததானால் அது சிறியதாகவும் யாராவது அன்பளித்ததாகவும் இருக்கலாம். அதையும் கொடுத்துவிட்டார். ஆகவே தியாகமான தனது சேவைக்குக் கர்த்தர் அவரை நம்ப முடிந்தது (அப் 13:2).

அதை உடனே தொடர்கிறது அனனியா-சப்பீராவின் பேராசைக் கதை. விற்ற பணத்தை எல்லாம் கொடுக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல. அப்படியானால் அவர்களது காணிக்கை பரிசுத்த ஆவியானவரிடம் சொல்லப்பட்டப் பொய்யாக ஏன் எண்ணப்பட்டது? எல்லோரும் தியாகமாகக் கொடுத்தார்கள். இவர்களும் அந்தப் பட்டியலில் சேர விரும்பினர். எல்லாவற்றையும் கொடுத்ததுபோல நாடகமாடிவிட்டு, ஒரு பகுதியை வைத்துக் கொண்டனர். ஆண்டவர் இருதயத்தைப் பார்க்கிறார். அவர்கள் இருதயத்தை நிரப்பியிருந்தக் கள்ளத்தனத்தை ஆவியானவர் கண்டார். திருக்குள்ள நமது இதயத்தை எவ்வளவு கவனமாகக் காக்க வேண்டியிருக்கிறது! நம்மில் சாத்தானின் வேலை எவ்வளவு தந்திரமாய் இருக்கிறது. பொய் சொல்லவும் ஏமாற்றவும் சாத்தான் தன் இருதயத்தை “நிரப்ப” அனனியா இடமளித்துவிட்டார். “பொருளாசை தன்னை உடையவர்களின் உயிரை வாங்கும்,” என்று ஞானி சரியாகத்தான் சொன்னார் (நீதி 1:19).

PDF Eraser Free

ஆபிரகாமின் ஊழியனை வரவேற்க லாபான் வெளியே ஓடினான். அவனை ஓடோடச் செய்தது என்ன? அவனுடைய சகோதரி அணிந்திருந்த நகைகளே. யாக்கோபு அவனுடைய மருமகனான போது, இந்த குணம் அவன் நடக்கைகளில் வெளிப் பட்டது. சாலொமோன் விரும்பியதெல்லாம் அவருக்குக் கிடைத்தது. வரவர அவர் தேவன் மேல் சார்ந்திருந்தது குறைவுபட்டது. அதுதான் வெற்றியின் தோல்வி. நமது இரட்சிப்பை மனதில் கொண்டே பிசாசின் தானத்திற்கு மறுப்புத் தெரிவித்தார் இயேசு. பண ஆசை உள்ளவர்களுக்கு ஆத்தும பாரம் இருக்காது. தங்கள் நெற்றி வியர்வையால் சம்பாதித்தப் பணத்தை அனுபவிக்காமல் மரித்ததால் இந்திய வங்கிகளில் 18,813 கோடி கேட்பாரற்றுக் கிடக்கிறது. இரண்டு தலைவர்களை திருப்திப்படுத்த முடியாது. பணமே நமது தலைவனானால் இறைவனை ஓரங்கட்டுவோம். கடவுள் காட்டும் பாதையில் நடப்பதை விட்டு பண ஆசை விரட்டும் பாதையில் ஓடுவோம். சிப்பாய் ஒருவன் சொல்கிறான், ''மகிழ்ச்சியாயிருக்க இறைவனிடம் சம்பத்தைக் கேட்டேன், நான் ஞானியாகும்படி ஏழ்மையைக் கொடுத்தார்.'' மூடனான பணக்காரனை இது நினைவூட்டுகிறதா? (லூக் 12:20).

பணத்தைக் குறித்தப் போதனையைக் கேட்ட பண ஆசை பிடித்தப் பரிசேயர், இயேசுவை பத்தாம் பசலி என்று அவரது போதனையை குப்பைத் தொட்டியில் போட்டனர் (லூக் 16:14). கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை! செழிப்பின் ஆசை ஒருபக்கம், இறைவனை நேசிக்க முயற்சி மறுபக்கம். அவரது போதனை அவர்களுக்கு நடைமுறையாய்த் தோன்றவில்லை. ஆகவே அவரை கிண்டலடித் தனர். இயேசு கொடுத்த பதிலடி என்ன தெரியுமா? —எல்லார் முன்பாகவும் பரிசுத்தவான்கள் போல நாடகமாடுகிறீர்கள், ஆனால் கடவுள் உங்கள் இருதயத்தை அறிந்திருக்கிறார். நீங்கள் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுவது கடவுள் பார்வையில் காலில் படிந்துள்ள தூசி (லூக் 16:9-15). இதைத் தொடர்ந்து ஒரு பணக்காரனையும் லாசருவையும் குறித்துப் பேசினார் (வச 19-31). உங்கள் சம்பத்தைப் பயன்படுத்தி நண்பர்களைச் சம்பாதியுங்கள். அப்படி யானால் நித்திய வாழ்வில் மாலையோடும் பூங்கொத் தோடும் உங்களை வரவேற்க பலர் இருப்பர், என்றார் (வச 9). இறையரசிற்காக செலவழியுங்கள். உங்கள் சம்பத்தில் உத்தமமாயிருந்தால் உங்களை நம்பி மெய்ப் பொருளைக் கொடுப்பார் (வச 11).

''*என் கனவு-இந்தியா*'' என்ற தனது புத்தகத்தில் அண்ணல் காந்தி சொல்வதைக் கேளுங்கள்: ''இந்தியாவில் பலகோடி மக்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவோடு திருப்தியடைய வேண்டி யிருக்கிறது. அதுவும் கொஞ்சம் உப்பு போட்ட சுக்கா ரொட்டி. அவர்கள் ஆரோக்கியமாய் உணவருந்தி உடுத்தும் வரை, நாமாக நமது தேவைகளைக் குறைத்து புத்திசாலித்தனமாக வாழப் பயிலும் வரை உங்களுக்கும் எனக்கும் எதையும் அனுபவிக்க உரிமை கிடையாது.'' தரமான வாழ்வைத் தேடி ஓடும்போது வாழ்க்கையே இல்லாதவரை மறந்து போகிறோம். உங்களிடம் பொய்பேசாமல் மனச் சாட்சியின் சத்தத்தைக் கேட்டு, நீங்கள் ஏழையா? சுமாரா? பணக்காரரா? என்று தீர்மானியுங்கள். பணக்காரரானால் அதிரடியாய் குறைக்கத் திட்டமிடுங்கள்.

5-10 பிள்ளைகளைக் கொண்ட முந்தின தலைமுறை குடும்பங்கள் எளிமையாய் வாழ்ந்து எல்லோரையும் படிக்க வைத்தனர். பெருத்த பர்சும் சிறுத்த குடும்பமும் கொண்ட நாம் திணறுகிறோமே, ஏன்? அண்டை வீட்டாரைப்போல இருக்கத்தானே! பணப் பயித்தியம் குடும்பக் கலாச்சாரத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது. மனைவி வெளிநாட்டில் சம்பாதிக்க கணவன் உள்நாட்டில் வீடுகட்டும் கணக்கராகிறார். இல்லையெனில் பிள்ளைகளை அழஅழ விடுதியில் தள்ளிவிட்டு இருவரும் வெளி நாட்டில். பணம் என்றால் பத்தும் பறந்து போகிறது. இது திருமறைக்குப் புறம்பானது. உங்களுக்கும் மனஅழுத்தம், தலைவலி, தூக்கமின்மை போன்ற சுகவீனங்கள் வரலாம். ஒன்றுமில்லாததற்குப் பிள்ளைகளைப் பார்த்துக் குரைக்கிறீர்கள். பொறுமை யாக வேதம் வாசித்து ஜெபிக்க நேரம் கிடையாது. வாழ்க்கை மனோரம்மியமாயில்லை. உங்கள் வாழ்க்கை வனாந்தரமாகிவிட்டதைப் பிந்திதான் காண்பீர்கள்.

இறைவனை மகிமைப்படுத்தும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு குடும்பம் ஒன்றாக இருக்கணும். எனவே குறைந்த வருமானத்தில் குறைந்த வசதி களோடு திருப்தியாயிருங்கள். காசைவிட குடும்பம் முக்கியம். குறைவாக சம்பாதித்து பூங்காவிற்குப்

PDF Eraser Free

போவது மேன்மையானது. இப்போது பத்து மடங்கு சம்பாதித்தும் பத்து மடங்கு சந்தோஷமாயில்லை. நான் செல்வ செழிப்பிலும் என் கணவர் ஏழ்மை யிலும் வளர்க்கப்பட்டவர்கள். செழுமையினால் வரக் கூடிய பாதகங்களையும் ஏழ்மையினால் வரக்கூடிய சாதகங்களையும் எங்கள் வாழ்க்கையில் காண்கிறேன். எங்கள் வாழ்வில் இக்கரையையும் அக்கரையையும் பார்த்துவிட்டோம். "பணத்தையும் பணம் வாங்கக்கூடியவற்றையும் உடையவரா யிருப்பது நல்லதுதான்; ஆனால் பணம் வாங்க முடியாதவற்றை இழந்திருக்கிறோமா என்று அவ்வப் பொழுது சரிபார்த்துக் கொள்வது நல்லது" என்கிறார் ஜார்ஜ் லோரிமர்.

இயேசு பணக்காரராயில்லை என்று அவ்வப் போது நினைவூட்டிக்கொள்வது நல்லது. வாழ சம்பாதிக்க வேண்டும்தான். வருங்காலத்திற்கு சேமிக்க வேண்டும்தான். அது நடைமுறை ஞானம். ஆனால் "போதும்" என்று எப்போது சொல்ல வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும். உள்ளதைக் குறித்த மகிழ்ச்சியை பேராசை சீரழித்துவிடும். சாதா வாழ்க்கைக்குப் போதுமானது இப்போது இருக்கிறதா? இன்னும், இன்னும் சேமிப்பதை நிறுத்திவிடுங்கள். இருக்கும் வங்கி சேமிப்பு போதும். பணத்தை நாடிப் போனால் தரிசனத்தை இழந்துவிடுவீர்கள். சோதிக்கப்படும் போதெல்லாம் இயேசுவை நினைத்துக் கொள்ளுங்கள்.

இயேசுவின் வருகைக்கு நேராக நமது தொலை நோக்கியைத் திருப்புங்கால், அவரது வருகையின் அடையாளங்களை அறியாதவராய் மக்கள் பணம், பணம் என்றுப் பறந்து அவனது பொறிக்குள் வழுக்கி விழுவதை தன் இரு கைகளையும் தேய்த்து பொல்லாத சிரிப்புடன் சாத்தான் கண்டு களிப்பதையும் காணலாம். முழு பெலத்துடனும் தப்பித்துக் கொள்ளுங்கள்!

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் (பேராசையை எல்லாம் அல்ல) கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி 4:19).